**செய்தி வெளியீடு எண்: 792** **நாள்: 22.11.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (22.11.2017) தூத்துக்குடியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

மீனவ மக்களின் காவல் தெய்வம்
வல்லரசும் வந்து வாழ்த்தும் வல்லமை கொண்ட ஞானி
பகுத்தறிவு பெரியாரின் துணிவு
பேரறிஞர் அண்ணாவின் கொள்கை முழக்கம்
புரட்சித் தலைவர் கண்ட பொன்மனச்செல்வி
**இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில்
தலைமை தாங்கி தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **ப. தனபால்** அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ. பன்னீர்செல்வம்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **மு. தம்பிதுரை** அவர்களே!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்
திரு. **கடம்பூர் ராஜு** அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அரசுச் செயலாளர்
திரு. **இரா. வெங்கடேசன்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,
நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **ஜெ. ஜெயசிங் தியாகராஜ் நட்டர்ஜி** அவர்களே!

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **எஸ்.பி. சண்முகநாதன்** அவர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **எஸ்.இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி
**பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **என். வெங்கடேஷ்** அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே,
சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!
மலேசியா வாழ் தமிழ் அன்பர்களே,
கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!

இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை  தெரிவித்துக்கொள்கிறேன்.

**நீர் நிறைந்த நிலத்தை தூத்து,**
**அதில் துறைமுகத்தையும், குடியிருப்புகளையும்**
**உருவாக்கிய ஊர் தூத்துக்குடி என அழைக்கப்படுகின்றது.**

கிரேக்கப் பயணி **தாலமி** – தூத்துக்குடியை **''முத்துக்குளிக்கரை''** என்றும் **ஜேம்ஸ் கர்னல் ''தோத்துக்கரை''** என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

தூத்துக்குடி கடல் வாணிபத்திலும், முத்துக்குளிப்பதிலும் உலக மையமாக திகழ்வதால் இதனை **''முத்து நகர்''** என்றும் அழைக்கிறார்கள்.

தூத்துக்குடியில் முத்துக்குளித்தல்,
மீன்பிடித்தல், சங்கு எடுத்தல்,
உப்பு உற்பத்தி செய்தல் போன்ற தொழில்கள் நடைபெறுகின்றன.

இங்கு பருத்தியும்,  மிளகாயும் அதிகளவில் விளைகின்றன.

**தாமிரபரணி** ஆறு   திருநெல்வேலியை வளப்படுத்திவிட்டு கடைசியில் தூத்துக்குடி கடலில் வந்து சங்கமம் ஆகிறது.

பாண்டியர்கள், சோழர்கள், முகமதியர்கள், நாயக்கர்கள், ஆங்கிலேயர்கள், போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள் என தூத்துக்குடி  பலரின் ஆளுகையிலும், அடக்குமுறையிலும் இருந்திருக்கின்றது.

சங்கீத  மும்மூர்த்திகளில் ஒருவரான
**முத்துசுவாமி தீட்சிதர்** தோன்றிய
**இசை மண்** தூத்துக்குடி மாவட்டமாகும்.

**''சிந்து நதியின் மிசை நிலவினிலே**
**சேர நன்  நாட்டு இளம் பெண்களுடனே**
**சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து**
**தோனிகள் ஓட்டி விளையாடி வருவோம் –**
**கங்கை நதி புறத்து கோதுமை பண்டம்**
**காவிரி வெற்றிலைக்கு மாறு  கொள்வோம்**

**சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு**
**சேரத்து தந்தங்கள் பரிசளிப்போம்**" என்று

தீர்க்க தரிசனமாகப் பாடி தேசிய ஒருமைப்பாட்டிற்கு வித்திட்ட **தேசியகவி பாரதியாரைப் பெற்ற எட்டையபுரம்** தூத்துக்குடி மாவட்டத்திற்கு அழியாப் புகழைத் தந்திருக்கிறது.

இந்திய சுதந்திரப்போரில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு பெரும் பங்கு இருக்கின்றது. தற்கொலைப் படையாக மாறி ஆங்கிலேயர்களின் வெடி மருந்துக் கிடங்கைத் தகர்த்து எறிந்த தியாகத் திருமகன் **வீரன் சுந்தரலிங்கம்** பிறந்த வீரமண் இது.

ஆங்கிலேயர்களுக்கு எதிராக படைதிரட்டிய குற்றத்திற்காக பீரங்கி வாயிலில் கட்டி வைத்து சுட்டுத் தள்ளப்பட்டு வீரமரணமடைந்த **வீரன் அழகு முத்துக்கோன்** தோன்றிய மாவட்டம் இது.

ஆங்கிலேயருக்கு தலை வணங்காததால்
**நாட்டின் பொது எதிரி** என குற்றம் சாட்டப்பட்டு
தூக்கிலிடப்பட்ட **வீரபாண்டிய கட்டபொம்மன்**
வீர நடை பயின்ற தியாக பூமி இது.

இருபதாம் நூற்றாண்டில் **வ.உ.சிதம்பரம் பிள்ளை** திருச்சியில் பிளீடர் பட்டம் பெற்று, தூத்துக்குடிக்கு திரும்பியபிறகு **சுதந்திரப்போர்** மீண்டும் பற்றிக் கொண்டது.

வ.உ.சிதம்பரனார் அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இரண்டு கப்பல்களை வாங்கினார்.
அதனால் ஆங்கிலேயர்களால் பல துன்பங்களுக்கு ஆளானார். **தேசியவாதி சுப்பிரமணிய சிவா, பத்ம நாப அய்யங்கார்** ஆகியோரின் உதவியுடன் '**தூத்துக்குடி மக்கள் சங்கத்தை**' உருவாக்கி ஆங்கிலேயர்களை எதிர்த்தார்.

அதனால், **வ.உ.சிதம்பரனாரை 'தேசத்துரோகி'**
என குற்றம்சாட்டி ஆங்கிலேயர்கள் அவரை சிறையில் அடைத்து, சித்திரவதை செய்தார்கள்.
செக்கிழுக்க வைத்தார்கள். இறுதியில் நமது தாய் நாட்டுக்காக தன் இன்னுயிர் நீத்தார்கள்.

சுதந்திரத்திற்கு பின் **வ.உ.சிதம்பரனார்** அவர்களின் நினைவை போற்றும் வகையில் அவருடைய பெயரில் **சுதேசி நீராவிக் கப்பல் போக்குவரத்தை** அப்போதைய இந்திய கவர்னர் ஜெனரல் **திரு. இராஜாஜி** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

மேலும் **தூத்துக்குடி துறை முகத்திற்கு**
**வ.உ.சி. துறைமுகம்** என்றும் பெயர் சூட்டப்பட்டது.

முருகனின் ஆறுபடை வீடுகளில்
ஒன்றான **திருச்செந்தூர்,**
பழமையான **பனிமய மாதா தேவாலயம்**,
கழுகுமலை, **நவதிருப்பதிகள்**,
**குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் கோயில்,**
**மெய் ஞான புரம் தேவாலயம்,**
**சித்தலங்கரை – தேவி வெட்ட காளியம்மன் கோயில், வனதிருப்பதி** போன்ற ஆன்மிக திருத்தலங்களையும்,

மணப்பாடு சின்ன நெடுசேலம்,
வல்லநாடு வெளிமான் சரணாலயம், கொற்கை,
பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் கோட்டை,
புரட்சிக் கவிஞர் பாரதியார் பிறந்த எட்டையபுரம்,
மாவீரன் கட்டபொம்மன் ஆங்கிலேயர்களால் புளியமரத்தில் தூக்கிலிடப்பட்ட கயத்தாறு, ஆதிச்சநல்லூர், அய்யனார் சுனை,
**மாவீரன் வாஞ்சி நாதனால் ஆஷ் துரை சுட்டுக்கொல்லப்பட்ட வாஞ்சி மணியாச்சி, எட்டையபுரத்தில் பாரதியார் இல்லம்,**
**பாரதியார் மணிமண்டபம்,**
**வ.உ.சிதம்பரனார் பிறந்த இல்லம்,**
**வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம்,**
**வீரன் சுந்தரலிங்கம் நினைவகம்,**
**வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம்,**
**அமுதகவி உமறுப்புலவர் நினைவகம்,**
**வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் போன்று பார்க்கவேண்டிய பல வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளன.**

**1866** ஆம்ஆண்டு நவம்பர் ஒன்றாம் தேதி உருவாக்கப்பட்ட **தூத்துக்குடி நகராட்சி** தமிழகத்திலுள்ள பழமையான நகராட்சிகளில் ஒன்று.

**1986** ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் உத்தரவின் பேரில் **தூத்துக்குடி** புதிய **மாவட்டமாக** உருவானது.

வீரமும் தேசப்பற்றும் மனிதாபிமானமும் மிக்க மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழாவை தங்கள் வீட்டுத் திருவிழாவாக தூத்துக்குடி மக்கள் கொண்டாடிக் கொண்டிருப்பது உண்மையிலேயே எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியை அளிக்கிறது.

இப்போது மட்டுமல்ல.. தொடக்க காலத்திலிருந்தே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.,அவர்கள் மீது அளவுகடந்த மரியாதையும், அன்பும் வைத்திருந்தவர்கள் தூத்துக்குடி மாவட்ட மக்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., அவர்களின் படங்கள் வெளியிடப்படுகிறது என்றால் அன்றைக்கு தூத்துக்குடி மாவட்டமே விழாக்கோலம் பூண்டிருக்கும். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சியும், புத்துணர்ச்சியும் ஏற்படும். அதற்கு எத்தனையோ சம்பவங்களை இங்கே உதாரணமாகக் கூறமுடியும்.

அந்தக் காலகட்டத்தில் மதுரை தங்கம் தியேட்டருக்கு அடுத்தபடியாக **பெரிய திரையரங்கம்** தூத்துக்குடி **சார்லஸ் திரையரங்கம்தான்.** இத்திரையரங்கில் **1973**, மே–**11**ம் தேதி ‘**உலகம் சுற்றும் வாலிபன்**’ படம் திரையிடப்பட இருந்தது. இதற்கு முந்தைய வருடம்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அ.இ.அ.தி.மு.க.வை தொடங்கி இருந்தார்கள்.

அதனால் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜிஆர்., அவர்களை ஒழித்துக் கட்ட வேண்டும்.. அ.இ.அ.தி.மு.க.வை தலைதூக்க விடக்கூடாது என்று எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டிக் கொண்டு எத்தனை தொந்தரவுகள் கொடுக்க வேண்டுமோ, அத்தனை தொந்தரவுகளையும் கொடுத்தார்கள்.

தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பழைய படங்களைக்கூட திரையிட முடியாத அளவுக்கு அச்சுறுத்தல்கள் இருந்தன.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தீவிர ரசிகர்களுக்கும் மிரட்டல்கள் விடப்பட்டன. எனவே, குறிப்பிட்ட நாளில் **‘உலகம் சுற்றும் வாலிபன்’** படத்தை தூத்துக்குடியில் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது.

ஆனால்.. யாருடைய மிரட்டலுக்கும் அஞ்சாத.. தூத்துக்குடி ரசிகர்கள் மூன்று நாள் கழித்து சார்லஸ் தியேட்டரில் படம் வெளிவர களத்தில் இறங்கினார்கள். படச்சுருள் தியேட்டருக்குள் போகமுடியாத அளவிற்கு எதிரிகள் பலர் தியேட்டர் வாசலில் நின்று கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

திரையரங்கு முன் கூட்டம் அலை மோதியது. படச்சுருள் வராமலேயே கவுண்டரில் டிக்கெட் வழங்கப்பட்டது.

சிறிது நேரத்தில் **வெண் திரையில்**
**‘உலகம் சுற்றும் வாலிபன்’** படம் ஓட ஆரம்பித்தது.
தொண்டர்களின் ஆரவாரத்திற்கிடையே,
சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின்
கணீர் என்ற வெங்கலக் குரலில்
**‘நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும், இப்படை தோற்கின் எப்படை வெல்லும்’** என்ற பாடல் தியேட்டரையே அதிர வைத்தது.

இத்தனை பாதுகாப்பையும் மீறி படச்சுருள் எப்படி திரையரங்கிற்குள் சென்றது ? என்று வெளியே காவல் காத்துக் கொண்டிருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்..

போஸ்டரே ஒட்டாமல் வெளிவந்து  வெற்றி பெற்ற
ஒரே திரைப்படம் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த **“உலகம் சுற்றும் வாலிபன்”**
என்பது திரைஉலக வரலாறு.

இப்படி அந்தக் காலத்திலேயே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு பல எதிர்ப்புகளையும் மீறி ஆதரவளித்த
மக்கள் நீங்கள். இப்போதும் அதே உள்ளத்தோடும், உற்சாகத்தோடும்தான் நீங்கள் ஆதரவளித்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியோடு இப்போது அஇஅதிமுக தொண்டர்களான நாங்கள் மக்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறோம். கழகத்தின் இருபெரும் தலைவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் நாங்கள் இங்கே வருகை தந்திருக்கின்றோம். காரணம் நீங்கள் எங்கள் மீது அசைக்க முடியாத அன்பும், மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீது வைத்திருந்த அன்பிற்கு தூத்துக்குடி மக்கள் மற்ற மாவட்ட மக்களுக்கு முன் மாதிரியாக திகழ்ந்தவர்கள். அதனால்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சர் ஆனவுடன் தூத்துக்குடி மக்களை சந்திக்க விரும்பினார்கள். தூத்துக்குடி **தருவை மைதானத்தில்** ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் கூட்டத்திற்கு வருகை தந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்களின் பேச்சை கேட்பதற்கும், அவரை நேரில் பார்ப்பதற்கும் கூட்டம் பெருங்கடலென அலை மோதியது. எல்லோருக்கும் மைதானத்தில் இடம் இல்லை
என்ற நிலை ஏற்பட்டது. பலர் மைதானத்தின் சுற்றுச்சுவருக்கு வெளியிலேயே நிறுத்தப்பட்டார்கள்.

வெளியூரிலிருந்து வந்த பல தாய்மார்கள் காவலர்களின் கட்டுப்பாட்டையும் மீறி மைதானத்தின் சுவர்மீது ஏறிக்குதித்து மைதானத்திற்குள் நுழைந்தார்கள். கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேறு வழியில்லாமல் காவலர்கள் லத்தியை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதைத் தெரிந்து கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து காவலர்களிடமிருந்த லத்திகள் அனைத்தையும் மேடைக்கு கொண்டுவரச் செய்தார்கள்.

நிகழ்ச்சி முடியும் வரை லத்திகளை காவலர்களிடம் ஒப்படைக்கவில்லை. நிகழ்ச்சி முடிந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அவர்கள் தாய்மார்களைப் பார்த்து அன்போடு கையசைத்துவிட்டு காரில் ஏறிய பிறகுதான் லத்திகள் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

தாய்மார்கள் எப்போதும் துன்புறக்கூடாது என்பதில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கண்டிப்புடன் இருந்தார்கள்.

தாய்மார்களுக்கு எப்போதும் எந்த இடத்திலும்
அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள்.
அதனால்தான் தனக்குப்பிறகு அ.இ.அ.தி.மு.க.வை வழிநடத்துவதற்கு மிகவும் தகுதியானவராக கருதி.. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு அரசியல் பயிற்சி அளித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.,அவர்கள் தாய்க்குலத்தின் மீது எத்தனை ஆழமான நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதற்கு இங்கே நான் ஒரு சம்பவத்தை குறிப்பிட விரும்புகின்றேன்.

1962 ஆம் வருடம், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் படப்பிடிப்பிற்காக பெங்களூர் அருகில் காரில் தன் உதவியாளர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

கிராமப்பகுதியில் ஒரு ரயில்வே கேட்டில் வண்டி நின்றது. ரயில்வே கேட் திறக்கப்படும் வரை மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காரில் காத்துக் கொண்டிருந்த நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை அந்த கிராமத்து மக்கள் பார்த்துவிட்டார்கள். சாலை ஓரத்திலிருந்த ஒரு குடிசையிலிருந்த மூதாட்டி காருக்கு அருகில் வந்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை தன் குடிசைக்கு வரவேண்டும் என்று அழைத்தார். மூதாட்டியின் அன்புக்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காரிலிருந்து இறங்கி மூதாட்டியின் குடிசைக்கு சென்றார். கூடவே உதவியாளர்களும் தொடர்ந்தார்கள்,

**‘‘அய்யா, நீங்க எங்க குடிசைக்கு வருவதற்கு**
**நாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ ?**
**சூடா பசும்பால் இருக்கிறது –**
**கொஞ்சம் சாப்பிடுங்க அய்யா’’** என்ற வேண்டுகோளுடன் பசும் பாலை எடுக்க ஓடினாள்.

பசும்பாலை ஆற்றிக் கொடுத்த போது அதை
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் உதவியாளர்கள் முதலில் வாங்கி குடித்து பார்த்தார்கள். பிறகுதான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் குடிக்க கொடுத்தார்கள். பிறகு ரயில்வே கேட் திறந்ததும் வண்டி புறப்பட்டது.

காரில் அமர்ந்ததும், உதவியாளரிடம்
**“தம்பி உனக்கு ரொம்ப பசியா?**
**பசும் பாலை பிடுங்கி முதலில் குடித்தாயே”** என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சிரித்துக் கொண்டே அந்த உதவியாளரிடம் கேட்டார்கள்.

**“யார் எதைக் கொடுத்தாலும் குடித்து விடுகிறீர்கள். அவங்க ஏதாவது கலந்து கொடுத்திருந்தால் என்ன ஆவது. அதனால்தான் நாங்கள் குடிச்சிப் பார்த்தோம் மன்னிச்சிடுங்க அய்யா”** என்றார் அந்த உதவியாளர்.

இதைக் கேட்டதும் கோபமடைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
**“மூதாட்டி எனக்கு ஏன் விஷம் கொடுக்க வேண்டும், ஒரு நல்ல தலைவனுக்கு அஸ்திவாரம் என்ன தெரியுமா? மக்கள் நம் பேரில் வைத்திருக்கின்ற மதிப்பும், நாம் அவர்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் தான்”** – என்றார்கள்.

இந்த உணர்வு தான் தலைவர் மறைந்து 30 வருடங்கள் கழித்தும் அத்தகைய மாபெரும் தலைவரை நாம் அனைவரும் மறவாமல் நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உங்கள் மீது வைத்திருந்த அதே பாசத்தில் சிறிதும் குறைவில்லாமல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் உங்கள் மீது அக்கறை கொண்டிருந்தார்கள். 14.3.2003 அன்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த சாத்தான்குளத்தில் நடந்த அரசு விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேசியது இப்போது என் நினைவுக்கு வருகிறது.

**“ 26.2.2003 ஆம் ஆண்டு நான் இதே**
**சாத்தான் குளம் இடைத்தேர்தலுக்காக**
**உங்களிடம் வாக்கு கேட்டு நேரில் வந்திருந்தேன். எனது வேண்டுகோளை ஏற்று நீங்கள் மகத்தான வெற்றியை எங்களுக்குத் தந்தீர்கள்.**
**அது என் மீது நீங்கள் வைத்திருந்த அன்புக்கும் நம்பிக்கைக்கும் அடையாளம்.**
**தேர்தல் முடிவு தெரிந்தது 1.3.2003 ல் தான்.**

**அதன் பின்னர் சரியாக 13 நாட்கள் கழித்து இன்றைக்கு நான் தூத்துக்குடி மாவட்டத்தின் அரசு விழாவை இந்த சாத்தான் குளத்திலேயே நடத்தி 163**

**கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பிலான நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்குவதற்காக இங்கு வந்திருக்கின்றேன் என்றால் இது நான் உங்கள் மீது வைத்திருக்கும் அன்பின் அடையாளம்''** என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருக்கமாக பேசினார்கள்.

**தேர்தல் முடிந்து 13 நாட்களுக்குள்ளேயே தொகுதி மக்களை சந்தித்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிய வரலாற்று சாதனை படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் போட்டிபோட்டுக் கொண்டு தூத்துக்குடியை நேசித்தார்கள். இருபெரும் தலைவர்களின் ஆசியால் அவர்களின் வழியில் ஆட்சி நடத்திக்கொண்டு இருக்கின்றோம்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பணி நிறைவு பெற்ற திட்டங்களை துவக்கி வைத்தும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.
அவற்றில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

**தூத்துக்குடி மநாகராட்சியின் சார்பில்**
**நிறைவேற்றப்பட்ட 285 கோடி மதிப்பிலான பணிகள்**
**உட்பட 467 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான**
**138 பணிகளை துவக்கி வைத்துள்ளேன்.**

இதில் தூத்துக்குடி மாநகராட்சி மக்களின் குடிநீர் தேவையை கருத்திற்கொண்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011–ல் தேர்தலின்போது, இந்த தூத்துக்குடி மாநகராட்சி மக்களுக்கு நிலையான தண்ணீர் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் பொருட்டு ரூ. 282 கோடி மதிப்பீட்டில் 2013ல் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்ப்பணிகள் நிறைவு பெற்று இந்த தூத்துக்குடி மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011–ல் சுற்றுப்பயணம் மேற்கொண்டபொழுது, இந்த தூத்துக்குடியில் பேசினார்கள். அப்பொழுது, இந்த தூத்துக்குடி மக்களின் நீண்டகால கனவு, இங்கே குடிநீர் பிரச்சினை இருக்கக்கூடாது, நிலையான குடிநீர் பிரச்சினை இல்லாத நிலையை உருவாக்கித் தரவேண்டும், தினந்தோறும் எங்களுக்கு

குடிநீர் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே கோரிக்கையாக வைத்தார்கள். அம்மா அவர்களால் அந்த கோரிக்கை ஏற்கப்பட்டு 2013–ல் இந்த திட்டம் துவக்கப்பட்டது. இன்றைக்கு மாநகராட்சியின் பரப்பளவு 90.66 சதுர கிலோ மீட்டர். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகையின்படி கிட்டத்தட்ட 3.72 இலட்சம் மக்கள் இந்த மாநகரத்திலே வசிக்கின்றார்கள். இந்தத் திட்டத்தினுடைய இன்றைய மதிப்பீடு ரூபாய் 282.44 கோடி. இந்தத் திட்டத்தின் வாயிலாக தாமிரபரணி ஆற்றின் மருதூர் அணைக்கட்டுப் பகுதியிலிருந்து நீர் எடுக்கப்பட்டு தூத்துக்குடி நகராட்சி மற்றும் பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகின்றது. இதிலே 20 புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 502 கி.மீ. தூரத்திற்கு குழாய்கள் அமைக்கப்பட்டு 98 சதவீத பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. இந்தத் திட்டம் வருவதற்கு முன்பு தூத்துக்குடி மாநகராட்சியில் வசித்துக் கொண்டிருந்த மக்களுக்கு எட்டு நாட்களுக்கு ஒரு முறை தான் குடிநீர் கிடைத்துக் கொண்டிருந்தது. ஏற்கனவே சோதனை ஓட்டம் இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கின்றது. மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தின் வாயிலாக, விரைவாக தினந்தோறும் தூத்துக்குடி மாநகராட்சியில் வசிக்கின்ற மக்களுக்கு நிலையான, பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்படும் என்ற நற்செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் திட்டத்தின் மூலமாக 60 ஆயிரம் புதிய இணைப்புகள் கொடுக்கப்படும். தற்போது 10000 இணைப்புகள் கொடுக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 50000 இணைப்புகள், 6 மாத காலத்திற்குள் மக்கள் தேவைக்கேற்ப வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தப் புதிய திட்டத்தின் உயர்ந்தபட்ச செயல்திறன் 86 MLT தண்ணீர் வழங்கக்கூடிய திட்டமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, 6 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பிலான
ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகங்களில்
கட்டடம் கட்டுதல் உட்பட 8 கோடியே
8 லட்சம் ரூபாய் மதிப்பிலான 8 பணிகளுக்கு
நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளின் சார்பில் 24 ஆயிரத்து 300
பயனாளிகளுக்கு 154 கோடியே 76 லட்சம் ரூபாய்

மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்க
உள்ளேன்.

தமிழ் நாடு முழுவதும், இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை 11
ஆயிரத்து 412 கோடியே
45 லட்சம் ரூபாய் மதிப்பிலான 35ஆயிரத்து
571 பணிகளை துவக்கி வைத்தும், 4 ஆயிரத்து
872 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பிலான
7 ஆயிரத்து 121 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.
**ஆக மொத்தம் 16 ஆயிரத்து 285 கோடி**
**மதிப்பிலான 42 ஆயிரத்து 692**
**பணிகள் நடைபெறுகின்றன.**
கடந்த ஆறு ஆண்டுகளில் தூத்துக்குடி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட
திட்டங்களில் ஒரு சிலவற்றை
தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏனென்று சொன்னால், எதிர்க்கட்சித்தலைவர், இந்த அரசு இந்த நாட்டு மக்களுக்கு எந்தத் திட்டங்களை வழங்கியிருக்கிறது என்று ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லிக் கொண்டிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா விட்டுச்சென்ற பணி தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்லாமல், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள், பொதுமக்கள் வைக்கின்ற கோரிக்கையையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இந்த மாவட்ட மக்களுக்கு செய்த திட்டங்களை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த மாவட்ட மக்களுக்கு செய்த திட்டங்களை இந்த நேரத்திலே தெரிவிக்க
விரும்புகிறேன்.
படித்த ஏழை பெண்களுக்கான திருமண
உதவி திட்டத்தின் கீழ் 26 ஆயிரத்து
480 பெண்களுக்கு 95 கோடியே 78 லட்சம்
ரூபாய் திருமண நிதி உதவியும்,
107.52 கிலோ தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக 90 கோடியே 20 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1 லட்சத்து 14 ஆயிரத்து 516 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 38 கோடியே 72 லட்சம் ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. குடிமராமத்து பணிகள் திட்டத்தின் கீழ் 2 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 28 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் கீழ் 13 லட்சத்து 70 ஆயிரத்து 580 கன மீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளன. இதனால் 10 ஆயிரத்து 950 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

34 ஆயிரத்து 164 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 842 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாணாக்கர்களுக்கு 89 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 63 ஆயிரம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் 44 கோடியே 61 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 49 ஆயிரத்து 100 கர்ப்பிணிப் பெண்கள் பயன் அடைந்துள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 72 ஆயிரத்து 610 பயனாளிகளுக்க 104 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் 490 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 51 பாலம், சிறு பாலம்,

மேம்பாலங்கள் மற்றும் 849.77 கி.மீ
நீளச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

குடிசை மாற்று வாரியத்தின் மூலம்
29 கோடியே 15 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் 444 குடியிருப்புகள்
கட்டப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில் 204 கோடி
ரூபாய் மதிப்பீட்டில் 1 லட்சத்து 70 ஆயிரத்து 8
தனி நபர் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது.
தமிழ்நாட்டில் திறந்த வெளியில் மலம்
கழித்தல் இல்லாத முதல் மாவட்டமாக தூத்துக்குடி மாவட்டம்
அறிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு
குடி நீர் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பணிகள்
171 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
105 இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகத்தின் சார்பில் 99 கோடியே
73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
13 துணை மின் நிலையங்கள்
அமைக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் சூரிய சக்தியுடன்
கூடிய பசுமை வீடுகள் கட்டும்
திட்டத்தின் கீழ் 140 கோடியே 40 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டில் 8522 வீடுகள்
கட்டப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ்
120 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
11 ஆயிரத்து 346 வீடுகள் கட்டி
முடிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 507 ஊரகப் பள்ளிகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 484 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக 784 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சியின் மூலம் கடந்த ஆறு ஆண்டுகளில் 616 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவில் 922 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

பிற திட்ட நிதிகள் மற்றும் பொது நிதியின்கீழ் பொது மக்கள் அனைவருக்கும் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு 81 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல குடிநீர் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடியுடன் இணைக்கப்பட்ட 5 பஞ்சாயத்துப் பகுதிகளை இணைத்து 282 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள தூத்துக்குடி குடிநீர் திட்டப் பணிகள் நிறைவு பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அல்லும் பகலும் ஓய்வில்லாமல் உழைத்து மாவட்டங்கள் தோறும் பலகோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்தும், அறிவித்தும் வருவதை தமிழ் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். வேகமாகச் சுழலும் வண்டிச் சக்கரங்கள் சுழலாதது போல்தான் தெரியும். எங்கள் உழைப்பையும், நாட்டின் வளர்ச்சியையும் கண்டாவது எதிர்க் கட்சியினர் வெற்று அறிக்கைகளை வெளியிடுவதை விட்டுவிட்டு, மக்களுக்காக உழைக்கத் தொடங்குங்கள். இதை ஒரு கதையின் மூலம் மக்களுக்குச் சொன்னால், நன்றாக புரியும் என்று நினைக்கிறேன்.

ஒரு நரிக்கு காட்டுக்கே தலைவனாக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அதற்கு காட்டில் உள்ள

எல்லா விலங்குகளிடமும் நல்ல பெயர் எடுக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது என்று யோசித்தது. தன் சொந்த அறிவுக்கு உருப்படியான யோசனை ஒன்றும் தோன்றவில்லை. எனவே,
அது ஒரு கரடியிடம் சென்று யோசனை கேட்டது. உடனே கரடி சொன்னது,

**"நரியே, நீயும் உன் கும்பலும் இந்தக் காட்டுக்கே யோசனை சொல்லக் கூடியவர்கள், அறிவாளிகள் என்று பெயர் எடுத்திருக்கிறீர்கள். அப்படியிருக்க நீ வந்து என்னிடம் யோசனை கேட்கலாமா ?"** என்றது.

**"நான் உடனே தலைவனாக வேண்டும்.**
**அவசரமாக யோசனை சொல்"** என்றது நரி.

கரடி யோசனை சொன்னது.
**"முதலில் உன் வாயைப் பொத்திக் கொண்டு இரு.**
**அடிக்கடி ஊளையிடாதே ! அது போதும், உன்னை எல்லோரும் புகழ்வார்கள்"** என்றது.

**"அது என் குணம், அதை எப்படி நிறுத்துவது.. வேறு ஏதாவது உருப்படியான யோசனை சொல் !"** என்றது நரி.
**"இப்படி ஊளையிட்டுக் கொண்டு அலையாமல், பசியாயிருக்கும் காட்டு மிருகங்களுக்கு இரைகளைக் கொடு. அவையெல்லாம் உன்னை வாழ்த்தும். நீ தலைவனாகிவிடலாம்"** என்றது கரடி.

இந்த யோசனையை அற்புதமான யோசனை
என்றபடி நரி செயலில் இறங்கியது.

சிறிது நேரத்தில் இரைகளை முதுகில்
சுமந்துகொண்டு நரி காட்டில் பயணத்தைத் தொடங்கியது. எதிரே ஒரு காண்டாமிருகம் வந்தது.

**"காண்டா மிருகமே ! இதோ உனக்காக உணவு கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடு !** என்றது.

**"வேண்டாம் எனக்குப் பசிக்கவில்லை. உடல்நிலை வேறு சரியில்லை",** என்று காண்டாமிருகம் மறுத்தது.

நரி விடுவதாக இல்லை. **“முடியாது, சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும்”** என்று அதனை எதிரே நின்று தடுத்தது.

காண்டா மிருகம் மீண்டும் மீண்டும் சாப்பிட மறுத்தது. மீண்டும் நரி உணவை காண்டாமிருகத்திடம் திணித்து சாப்பிட வற்புறுத்தியது.
காண்டா மிருகத்திற்கு கோபம் வந்துவிட்டது.
**“எனக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லியும் கேட்காமல் தொந்தரவு செய்கிறாயே! ஓடிவிடு!”** என்று தன் கொம்புகளால் நரியை தூக்கி எறிந்தது.

தூக்கி எறியப்பட்ட நரிக்கு மீண்டும் எழுந்திருக்க முடியாத அளவிற்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. காண்டா மிருகம் அந்த இடத்தை விட்டு அகன்றது. அந்த நேரம் பார்த்து யோசனை சொன்ன கரடி
அந்தப் பக்கம் வரவே,
**“கரடியாரே! உங்கள் யோசனை கேட்ட**
**என் நிலையைப் பார்த்தீர்களா!”** என்றது.

**“பசிக்கின்ற விலங்குகளுக்கு உணவு கொடு**
**என்று உன்னிடம் யோசனை கூறினால்,**
**வயிற்று வலியோடு உடல்நிலை சரியில்லாத விலங்குக்கு உணவு**
**கொடுக்கிறாயே!**
**சொந்த அறிவும் கிடையாது,**
**கேள்வி அறிவும் கிடையாது.**
**உன்னால் ஒருக்காலும் தலைவனாக முடியாது!”**
என்று சொல்லிவிட்டு கரடியும்
அந்த இடத்தைவிட்டு நகர்ந்தது.

இப்படித்தான் பலர், உடனே தலைவனாக வேண்டும், முதலமைச்சர் ஆக வேண்டும் போன்ற கனவில் தவறானவர்களிடம் யோசனை கேட்டு தவறான வழியில் சென்று கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்தக் கதையில் வரும் நரியின் நிலைமை தான் ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் ஆசியோடு நடைபெறும் அம்மாவினுடைய அரசு திட்டங்களை விரைந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு வரலாறு காணாத வறட்சி காலத்தில் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. தற்போது பெய்த வெள்ள பாதிப்புகளை சீர்செய்ய அனைத்து

இடங்களுக்கும் அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய குழுக்கள் நேரடியாக மக்களை சந்தித்து, உடனுக்குடன் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று எதிர்க்கட்சித்தலைவர் பேசுகிறார், வேடிக்கையாக இருக்கிறது. தமிழகம் இன்றைக்கு அமைதிப்பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தியாவிலேயே சட்டம், ஒழுங்கு சிறப்பாக பேணிக்காக்கப்படுகின்ற மாநிலம் தமிழ்நாடு என்பது மக்களுக்குத் தெரியும். ஆனால் இவர்கள் நினைத்தார்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் மறைந்துவிட்டார்கள், இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும், இந்த கட்சி உடைந்துவிடும் என்றெல்லாம் எண்ணினார்கள். ஆனால் அது ஒன்றுமே நடக்கவில்லை. அதனால் தினந்தோறும் ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள், பத்திரிகைகளில் எல்லாம் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவம் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழாவிலே நான் ஒரு கருத்தைச் சொன்னேன். நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இரட்டைக்குழல் துப்பாக்கியைப் போல் செயல்படும் என்று ஒரு கருத்தைச் சொன்னேன். எங்களுக்கு ஏற்பட்ட கருத்தை நாங்கள் சொல்கின்றோம். நாங்கள் இணைந்து செயல்படுவோம் என்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொன்னேன், இவர்களுக்கு என்ன கோபம் வருகின்றது என்றுதான் தெரியவில்லை. அருகில் இருக்கின்ற நெல்லை மாவட்டத்திலே எதிர்க்கட்சித்தலைவர் ஸ்டாலின் அவர்கள் பேசுகின்றபொழுது இதைக் குறிப்பிட்டுச் சொல்கின்றார். எந்த அளவுக்கு மனக்குமுறல் இருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய கருத்தைச் சொல்கின்றோம், இவருக்கு ஏன் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது ?

ஆகவே, நாம் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். இவருடைய எண்ணமெல்லாம் நிறைவேறவில்லை. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவு, எனக்கு பின்னாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 100 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரத்திலே இருக்கும் என்ற கருத்தை சட்டமன்றத்திலே சொன்னார்கள். அதேபோல் கட்சி வலிமை அடையும் என்று சொன்னார்கள். இவர்கள் கண்ட கனவு, புரட்சித்தலைவி அம்மா மறைவிற்குப் பிறகு இந்த இயக்கம் இருக்காது, இந்த இயக்கம் அழிந்துவிடும், இந்த ஆட்சி போய்விடும், நாம் ஆட்சிக்கு வந்துவிடுவோம் என்று பகல்கனவு கண்டார்கள். அந்த கனவு பலிக்காத காரணத்தினாலே தினந்தோறும் ஏதாவது ஒரு பொய்யை சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

நம்முடைய எண்ணமெல்லாம் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவை நனவாக்குவது தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஒவ்வொரு தொண்டனுடைய எண்ணம் என்பதை இந்த நேரத்திலே ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் எவ்வளவு பொய்களை அள்ளி வீசினாலும், பொய்மூட்டைகளை அவிழ்த்துவிட்டாலும் ஒரு தொண்டனைக்கூட நீங்கள் தொட்டுப்பார்க்க முடியாது என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, உங்களுடைய ஆட்சியிலே எவ்வளவு சட்டம், ஒழுங்கு சீர்குலைந்திருந்தது என்பதை நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கிறேன், ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

2006 ஆம் ஆண்டு தென்காசியில் இந்து முன்னணி அமைப்பாளர் குமாரபாண்டியன் கொலை செய்யப்பட்டார். 2000–ல் சிவகங்கை நகரமன்றத்தலைவர் குண்டு வைத்து கொலை செய்யப்பட்டார். அதே ஆண்டில் திமுக மாவட்ட செயலாளர் பூண்டி கலைச்செல்வன் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி துணைத்தலைவர் குமார் ஆகியோர் கொலை செய்யப்பட்டனர். 2008ல் பா.ஜ.க.திருவாரூர் மாவட்ட செயலாளர் மாணிக்கம் மற்றும் அவர் தந்தை ஆகியோர் கூலிப்படையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் கொலை செய்யப்பட்டனர். 2010ல் அதிமுக முன்னாள் அமைச்சர் வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டார். 2007ல் தினகரன் நாளிதழ், அடுத்த அரசியல் வாரிசு யார் என்ற கருத்துக்கணிப்பைத் தொடர்ந்து திமுக.–வைச் சேர்ந்த ரவுடி கும்பல் நடத்திய வெறியாட்டத்தால், மதுரையில் அப்பத்திரிக்கை அலுவலகம் சூறையிடப்பட்டது, தீ வைக்கப்பட்டது, மூன்ற அப்பாவிகள் கொல்லப்பட்டனர், இவ்வளவு பேர் இறந்திருக்கின்றார்கள், சட்டம் ஒழுங்கு எப்படி இருந்தது என்பது நாட்டு மக்கள் அத்தனைபேருக்கும் தெரியும் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு பள்ளிக்கல்வித்துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். கல்வி தமிழகத்தில் சிறந்து விளங்க வேண்டும். எந்தவொரு நாடு, எந்தவொரு மாநிலம் கல்வியிலே சிறந்து விளங்குகின்றதோ அந்த நாடு எல்லா வளங்களையும் பெறும் என்ற தொலைநோக்கு சிந்தனையோடு அம்மா அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். அதனால் தமிழகம் இன்றைக்கு வளர்ந்து நிற்கின்றது. கல்வியிலே, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக

விளங்கக்கூடிய அளவிற்கு வளர்ச்சியைப் பார்க்க முடிகின்றது. அதன் அடிப்படையில், பள்ளிக்கல்வித் துறைக்கு ரூபாய் 26,932 கோடியே 31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு.

மேலும், வரும் கல்வியாண்டு முதல் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு மாணவர்களுடைய எதிர்காலம் காக்கப்படும். நடப்பாண்டில், ரூபாய் 391 கோடி செலவில் பள்ளிகளில் முழு கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். மாணவர்களுக்கு 6 ஆண்டுகளில் மட்டும் சுமார் 37 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது, இந்திய வரலாற்றிலேயே எந்த மாநிலத்திலும் இதுபோன்ற வரலாறு கிடையாது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு நம்முடைய மாணவ, மாணவியர்கள் எதிர்காலத்திலே சிறந்தவர்களாக, வல்லவர்களாக உருவாக வேண்டுமென்பதற்காக மடிக்கணினியை வழங்கினார்கள். இன்றைக்கு வசதி படைத்த குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர்கள் ரூபாய் 14,000 மதிப்பில் மடிக்கணினி வாங்கி, பயன்படுத்தி, வேலைவாய்ப்பைப் பெறமுடியும். ஆனால் வசதியில்லாத ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியருக்கும் விஞ்ஞானப்பூர்வமான கல்வி கிடைக்கவேண்டும் என்பதற்காக சுமார் 37 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூபாய் 14,000 மதிப்புள்ள மடிக்கணினிகளை வழங்கி இந்தியாவிலேயே தமிழகம் விஞ்ஞான மாணவர்களை உருவாக்கிய பெருமை அம்மாவைச் சாரும் என்பதை இந்த நிகழ்ச்சி வாயிலாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எத்தனை ஆண்டுகாலமானாலும் இத்திட்டம் அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்டது என்பதை நம்முடைய மாணவ, மாணவியர் தெரிவிப்பார்கள் என்பதை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பள்ளிக் கல்வித்துறையில் கடந்த 6 ஆண்டுகளில் சுமார் 41,000 ஆசிரியர்கள், 4,400 ஆய்வக உதவியாளர்கள் மற்றும் 15,000 பகுதிநேர ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, தரமான கல்வி மாணவர்களுக்கு கிடைத்திருக்கின்றது.

அதேபோல, 227 புதிய தொடக்கப்பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக ஏழை, எளிய மாணவர்கள் உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை

ஏற்படுத்திக் கொடுத்தவர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித்தலைவர் அம்மா என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

கடந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் 65 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கித் தந்தார்கள். அம்மா வழியில் வந்த அம்மாவினுடைய அரசும் 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கியிருக்கின்றது. மொத்தம், 6 ஆண்டுகளில் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தமிழக மாணவ, மாணவியருக்கு அளித்திருக்கின்றோம். இதன் மூலமாக கல்வி கற்போரின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. ஏழை, எளிய, சமூகத்திலே பொருளாதாரத்தில் பின்தங்கிய வசதியில்லாத குடும்ப மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி கற்பதற்கு சிறந்த வசதியை அம்மா அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதன் காரணத்தாலே, 2011–ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராக பொறுப்பேற்கின்றபொழுது உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 100–க்கு 21 சதவீதம் தான் இருந்தது. இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில்தான், மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, சட்டக்கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி உருவாக்கி மாணவச் செல்வங்களின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 100–க்கு 21 பேர் படித்த எண்ணிக்கை, 44.32 சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில்தான் உயர்ந்திருக்கின்றது. மருத்துவத்துறையிலும் இன்றைக்கு சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றோம்.

குடிமராமத்து என்னும் அற்புதமான திட்டத்தின் மூலம், கிராமத்தில் வாழுகின்ற விவசாய மக்களுக்கு நீர் ஆதாரம் வேண்டுமென்பதற்காக, 1519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டு, விவசாயிகளின் பங்களிப்போடு, ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகளில் இருந்து விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற வண்டல் மண் அள்ளப்பட்டு நிலத்திற்கு அடிஉரமாக இடப்பட்டதோடு, வண்டல் மண் எடுத்த காரணத்தினால் பருவகாலங்களில் பொழிகின்ற மழைநீர் அதிகமான அளவில் தேக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்ந்திருக்கின்றது.

அது மட்டுமல்ல, புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு மூன்றாண்டுகளிலே 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே எங்கெங்கல்லாம் தடுப்பணை வேண்டுமோ, அங்கங்கெல்லாம் தடுப்பணை கட்டுவதற்கு நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நதியின் குறுக்கே, ஓடையின் குறுக்கே, பருவமழை காலங்களிலே மழைநீரை சேமித்து வைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்காக இந்த தடுப்பணை கட்டுகின்ற திட்டத்தை இந்த அரசு துவங்கியிருக்கின்றது. இதனால், பெய்கின்ற மழைநீர் தேங்கி, நிலத்தடி நீர் உயர்ந்து, விவசாயிகளுக்குத் தேவையான நீர், குடிப்பதற்கு தேவையான நீர் இந்தத் திட்டத்தின் வாயிலாக கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித்தலைவர் ஸ்டாலின் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உண்மைக்கு மாறாக எதிர்க்கட்சித்தலைவர் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தின் கீழ் 69.3 இலட்சம் குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக முட்டை வழங்கப்பட்டு வருகிறது. 16 இலட்சம் அங்கன்வாடி குழந்தைகளுக்கு வாரம் இருமுறை முட்டை வழங்கப்பட்டு வருகிறது. 53.3 இலட்சம் பள்ளி செல்லும் மாணவர்களுக்கு வாரம் 5 முறை முட்டை வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் 2012 முதல் சத்துணவுத் திட்டத்திற்கு முட்டை கொள்முதல் செய்து வழங்கப்பட்டு வருகின்றது. இரண்டு நாட்களுக்கு முன்பு, எதிர்க்கட்சித்தலைவர் ஸ்டாலின் ஒரு அறிக்கை வெளியிட்டார், இந்தத் திட்டத்தை கிடப்பிலே போட்டுவிட்டார்கள். முட்டைவிலை உயர்ந்த காரணத்தினாலே, முட்டை சாப்பிடுகின்ற சத்துணவு குழந்தைகளுக்கு முட்டை வழங்கவில்லை என்ற கருத்தை சொல்லியிருக்கின்றார். அது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசு ஏழை, எளிய மக்களை காக்கக்கூடிய அரசு, அந்த ஏழை, எளிய மக்கள் பெற்றெடுத்த குழந்தைகளுக்கு முட்டையை ஒருபோதும் தடுத்து நிறுத்த மாட்டோம், எவ்வளவு பிரச்சினை வந்தாலும் அதற்கு இடம் கொடுக்காமல், அந்த குழந்தைகளுக்கு முட்டைகள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்ற கருத்தை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். அவர் கருத்து தவறானது, வேண்டுமென்றே இந்த அரசின் மீது பழி சுமத்திக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, உங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளைக் கொடுத்தார்.

இது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழா. இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் நீங்கள் அனைவரும் மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் இருக்கின்றீர்கள்.

இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள், தொண்டர்கள், பொது மக்கள் ஆகிய அனைவரும் பத்திரமாக வீடுபோய் சேர்ந்தால்தான் நான் திருப்தியும், மனநிறைவும் அடைவேன். ஆகவே, நீங்கள் அனைவரும் வாகனங்களில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய் சேரவேண்டும்

இந்த விழாவை சிறப்பாக
ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு
எனது மனமார்ந்த பாராட்டுகளை
தெரிவித்துக் கொண்டு
இந்த அரசு உங்களின் சேவகனாக
தொடர்ந்து பணியாற்றும் என்பதை
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.
நேற்றும் நமதே ! இன்றும் நமதே ! நாளையும் நமதே !
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ் !
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி! வணக்கம்!

**தூத்துக்குடி மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார்கள்**

1) **ஏரல்—ஐ** தலைமையிடமாகக் கொண்டு **ஒரு புதிய வருவாய் வட்டம்** தோற்றுவிக்கப்படும்.

2) கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில், பெரியசாமிபுரம் மற்றும் அகிலாண்டபுரம் ஆகிய இடங்களில் புதிய **கால்நடை கிளை நிலையங்கள்** அமைக்கப்படும்.

3) அரசு மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் **தூத்துக்குடி வ.உ.சி. சந்தையினை நவீனப்படுத்தி**, வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன், புதிய வணிக வளாகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4) **தூத்துக்குடி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளான சங்கரப்பேரி, மீளவிட்டான், தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய பகுதிகளில் சாலைப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.**

5) **தூத்துக்குடி மாநகராட்சியின் அவசர மற்றும் அத்தியாவசிய பணிகளுக்காக** உரிய பணியாளர்கள் படிப்படியாக நியமிக்கப்படுவார்கள்.

6) தூத்துக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு மற்றும் புதூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் 5000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கும் ஏற்படுத்தப்படும்.

7) தூத்துக்குடி மாவட்டம், **திருச்செந்தூரில் திரு. சி.பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம்** கட்டப்படும். இதற்கான பணி 2018–19ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும்.

8) **மணப்பாடு கடற்கரைப் பகுதியில்** சாலை மேம்பாட்டுப் பணிகள், குடிநீர் வசதி, கழிவறை வசதிகள், வாகன நிறுத்துமிடம், கண்காணிப்பு கேமரா, வழிகாட்டிப் பலகைகள், மீட்புப் படகுகள், கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் சாதனங்கள் வழங்கி அப்பகுதி **சுற்றுலாத் தலமாக தரம் உயர்த்தப்படும்.**

9) தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் இந்திய மருத்துவக் கழகம் உரிய அனுமதி வழங்கியதும், மருத்துவப் பட்ட மேற்படிப்புகள் துவக்கப்படும்.

10) **விளாத்திகுளம் தாலுகா, சிவஞானபுரம் கிராமத்திலும், கயத்தார் ஊராட்சி ஒன்றியம், வானரமுட்டி கிராமத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்** அமைக்கப்படும்.

11) தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு **அதிநவீன உபகரணங்கள்** வழங்கப்படும். **மூப்பியல் பிரிவு** மற்றும் **நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை** வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

12) கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு **டயாலிசிஸ் கருவிகள், எண்டோஸ்கோப் ஆய்வக உபகரணங்கள் வழங்கப்படும்.**

13) ஏரல் அரசு மருத்துவமனையில் **நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம்** அமைக்கப்படும்.

14) திருச்செந்தூர் சமுதாய சுகாதார மையத்தில் **கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள்** ஏற்படுத்தப்படும்.

15) கருங்குளம் மற்றும் ஓட்டப்பிடாரம் வட்டாரங்களில் **விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள்** வழங்கப்படும்.

16) **விளாத்திகுளம் வட்டம், பெரியசாமிபுரம் கிராமம் மற்றும் வேம்பார் கிராமத்தில் வேம்பாற்றின் குறுக்கே இரண்டு தடுப்பணைகள்** கட்டப்படும்.

17) **ஸ்ரீவைகுண்டம் வட்டம்,** அகரம் குடியிருப்பு அருகே **வல்லநாடு கிராமத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை** கட்டப்படும்.

18) **சாத்தான்குளம் வட்டம், பள்ளக்குறிச்சி கிராமத்தில் கருமேனி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை** கட்டப்படும்.

19) **கோவில்பட்டி வட்டம், ஆவுடையம்மாள்புரம் கிராமத்தில் உப்போடையின் குறுக்கே ஒரு சிறிய தடுப்பணை** கட்டப்படும்.

20) **கோவில்பட்டி வட்டம், சிதம்பரம்பட்டி கிராமத்தில் உப்போடையின் குறுக்கே ஒரு தடுப்பணை** கட்டப்படும்.

21) **கோவில்பட்டி வட்டம், சவலப்பேரி கிராமத்தில் உப்போடையின் குறுக்கே ஒரு தடுப்பணை** கட்டப்படும்.

22) **உடன்குடி, செட்டிக்குறிச்சி, அரசரி கிராமம் மற்றும் தூத்துக்குடி கடற்கரை சாலை** ஆகிய 4 இடங்களில் **புதிய துணை மின்நிலையம்** அமைக்கப்படும்.

23) **பொட்டலூரணி – சேக்காரக்குடி – பேரூரணி – மங்களகிரி சாலையில் ஒரு சிறு பாலம்** கட்டப்படும்.

24) **மீனாட்சிபுரம் – வெங்கடாச்சலபுரம் சாலையில் ஒரு சிறு பாலம்** கட்டப்படும்.

25) **கோவில்பட்டி – கடலையூர் – முத்தாலபுரம் – பெரிலோவன்பட்டி – பிள்ளையார்நத்தம் சாலையில் ஒரு பாலம்** கட்டப்படும்.

26) **திசையன்விளை – உடன்குடி சாலையில் ஓர் உயர்மட்டப் பாலம்** கட்டப்படும்.

27) **கயத்தார் – கழுகுமலை சாலையில் ஓர் உயர்மட்டப் பாலம்** கட்டப்படும்.

28) **புதூர் – பரளச்சி சாலையில் ஓர் உயர்மட்டப் பாலம்** கட்டப்படும்.

29) **மீளவிட்டான் – தூத்துக்குடி** ரயில்வே நிலையங்களுக்கு இடையே

    1. ரயில்வே கடவு எண் **486–இல் சாலை மேம்பாலம்**

    2. மற்றும் **487–இல் அளவான பயன்பாட்டு சுரங்கப்பாதை** கட்டப்படும்.

30) **தூத்துக்குடி – கொல்லம் சாலையில் கூடுதல் சாலை மேம்பாலம்** கட்டப்படும். இப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

31) **படர்ந்தபுளி அருகில் பாலப் பணி** மேற்கொள்ளப்படும்.

32) **கோவில்பட்டி – குமாரபுரம் – கோபாலபுரம் – செட்டிக்குறிச்சி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

33) **கோவில்பட்டி ரயில்வே நிலையம் முதல் லெட்சுமி மில் மேம்பாலம் வரையிலான சாலையானது நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்தப்படும்.**

34) மணியாச்சி வழியாக வடக்கு நோக்கி செல்லும் **15**–க்கும் மேற்பட்ட இரயில்களின் பயண வசதியைத் தூத்துக்குடி நகர மக்கள் பயன்படுத்திடும் வகையில் மீளவிட்டான் முதல் மணியாச்சி

வரை இரயில் பாதையை ஒட்டி வாகனங்கள் செல்லும் வகையில் புதிய சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**